**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 128/2021**
**வழக்கு சாட்சி PW-4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | குமார் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | முத்தையா | தொழில் | : | கூலி வேலை |
| கிராமம் | : | தென்காசி | வயது | : | 57 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of September 18th, 2025.

**(1ம் எதிரி ஆஜரில்லை. இதர எதிரிகள் ஆஜர். கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தென்காசியில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். எதிரி சொர்ணம், பாபுவை தெரியும். அ.சா.1 நடராஜன் என்னுடைய சகோதரர். 29.10.2016 அன்று தீபாவளி தினத்தில் நடராஜன் அவருடைய நண்பர்களுடன் அவருடைய கடையில் பேசிக் கொண்டிருந்தபோது, எதிரிகள் அவரை தாக்கியதாக எனக்கு சாட்சி சதீஷ் போன் மூலம் தகவல் சொன்னார். நான் தென்காசி அரசு மருத்துவமனைக்கு சென்று நடராஜனை பார்த்தேன். நடராஜனுக்கு இடது பக்க தலையிலும், தோள்பட்டையிலும் காயம் இருந்தது. என்னிடம் காண்பிக்கப்படும் அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்திலுள்ள அறிவேன் சாட்சி கையெழுத்து என்னுடையது தான். அதனை போலீசார் அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்தபோது போட்டுக்கொடுத்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளவாறு தான் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். என்னுடைய எந்த செல்போன் நம்பருக்கு போன் வந்தது என்று தற்போது எனக்கு ஞாபகமில்லை. நான் ஆய்வாளர் விசாரணையில் எந்த நம்பரில் எனக்கு போன் வந்தது என்று நான் கூறவில்லை. சதீஷ் என்ற சுடர்மாணிக்கம் எனக்கு போன் செய்ததாக ஆய்வாளர் விசாரணையில் நான் சொல்லியுள்ளேன். தகவல் கிடைக்கும் போது நான் வீட்டில் சாப்பிட்டு கொண்டு இருந்தேன். சம்பவ நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும், எனது வீட்டிற்கும் 500 மீட்டர் தூரம் இருக்கும். எனக்கு போன் மூலம் சுமார் 03.45 மணியளவில் தகவல் வந்தது. சம்பவம் கால் மணி நேரத்திற்கு முன்பாக சம்பவம் நடந்ததாக தகவல் வந்தது.

நான் உடனடியாக சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய கடைக்கு வந்தேனா? என்றால் வந்தேன். அங்கு என் தம்பி இல்லை. அங்கிருந்தவர்களிடம் நான் விசாரித்தபோது, தம்பியை மருத்துவமனைக்கு ஆட்டோவில் கூட்டிச் சென்றதாக சொன்னார்கள். அவர்களிடம் விசாரித்தபோது தான் என் தம்பியை அரசு மருத்துவமனைக்கு கூட்டிச் சென்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். சதீஷ் எனக்கு போனில் அரசு மருத்துவமனைக்கு கூட்டிச் சென்ற விபரம் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் தங்கபாண்டியன் மருத்துவமனைக்கு செல்லவில்லை. நான் எனது தம்பியை பார்க்கும் போது 04.00 மணியிருக்கும். அப்போது அங்கு சதீஷ், மணிகண்டன் ஆகியோர்கள் இருந்தார்கள் என்றால் சரிதான்.

தென்காசி அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை அளித்து விட்டு, பின்னர் 04.15 மணியளவில் திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். 108 வாகனத்தில் கொண்டு சென்றோம். அப்போது சதீஷ், மணிகண்டன் எங்களுடன் திருநெல்வேலிக்கு வரவில்லை. சுப்பிரமணியனுக்கு நான் போனில் தகவல் சொல்லவில்லை. சம்பவத்திற்கு மறுநாள் காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள் என்றால் 03.11.2016 அன்று விசாரித்தார். தென்காசி அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை அளித்து விட்டு திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு கிளம்புவதற்கு முன்பாக தென்காசி காவல்துறையினர் என் தம்பி அ.சா.1 ஐ விசாரித்தார்கள் என்றால் சரிதான். அதில் நான் சாட்சி கையெழுத்து போட்டேன் என்றால் சரியல்ல. புகார் வாக்குமூலத்தில் என்ன எழுதியுள்ள விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். யார் எழுதினார்கள் என்று நான் பார்க்கவில்லை.

நான் சொன்ன நாளில், சொன்ன நேரத்தில் அ.சா.1 நடராஜன் எந்த ஒரு புகார் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும், போலீசார் புள்ளிவிபரக்கணக்கிற்காக அவருக்கு அனுசரனையாக அவர்களாக எழுதிக்கொண்ட புகார் வாக்குமூலத்தில் என்னுடைய கையெழுத்தைப் பெற்று தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. என்னுடைய தம்பி தாக்கப்பட்ட சம்பவத்திற்கும், எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், அ.சா.1 நடராஜனுக்கும், சுப்பிரமணியனுக்கும் எந்தவிதமான பகையும் இல்லை என்றால் சரிதான். நான் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.09.20 16:14:01 +0530